# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 69/பேரூ/2024**
**நாள் : 15.11.2024**

திரு. S. பழனி,
சேலம் மெயின் ரோடு,
தருமபுரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

உதவி இயக்குநர்,
தருமபுரி மண்டல பேரூராட்சிகளின்
உதவி இயக்குநர் அலுவலகம், தருமபுரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தருமபுரி மாவட்டம், சேலம் மெயின் ரோடு, நேரு நகர், 3/26, அரசு கலைக்கல்லூரி (எதிர்) என்ற முகவரியில் வசிக்கும் திரு. பழனி, என்பவரின் 30.04.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.05.2024 அன்று பெறப்பட்டு, 69/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தருமபுரி மாவட்டம், சேலம் மெயின் ரோடு, நேரு நகர்,3/26, அரசு கலைக்கல்லூரி (எதிர்) என்ற முகவரியில் வசிக்கும் திரு. பழனி, என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

> "நான், தற்போது விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியில் வரி தண்டலராக பணியாற்றி வருகிறேன். முன்னர் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றிய போது கடந்த 10.02.2023 அன்று பணியிடமாற்றம் செய்யப்பட்ட போது பணியிடமாற்றம் தொடர்பான ஆணையை பெறாததால் முன்னாள் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. குருராஜன் மற்றும் ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் ஆகியோரின் தூண்டுதலின் பேரில் தாக்குதலுக்கு உள்ளாகி தருமபுரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ விடுப்பில் இருந்தேன்.

மேற்படி மருத்துவ விடுப்புகாலமாகிய 11.2.2023 முதல் 18.04.2023 வரைக்கான மருத்துவ விடுப்புக்கால ஊதியத்தை நாளது தேதி வரை பலமுறை நேரிலும். தபாலிலும் விண்ணப்பித்தும் பெற முடியாத நிலையில் உள்ளது.

இந்நிலையில் மருத்துவ விடுப்புக்கால ஊதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் என்பவருக்கு 9489746262 என்ற எண்ணிற்கு Google Pay–ல் ரூ.10,000–ஐ செலுத்தவும், மேற்படி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக மாற்றுப்பணியில் பணி அமர்த்தப்பட்டுள்ள திரு. முரளி என்பவருக்கு ரூ.5000/–ஐ 7373675747 என்ற எண்ணிற்கு Google Pay ல் அனுப்ப நிர்பந்திக்கப்பட்டேன்.

முன்னர், எனது பணியிட மாற்றத்திற்காக தருமபுரி மாவட்ட அரூர் பேரூராட்சி வரி தண்டலரான திரு. சின்னப்பையன் என்பவரிடம் இருந்து ரூ.3,00,000/– ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் மூலம் பெறப்பட்டு முன்னாள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (தருமபுரி மண்டலம்) திரு. குருராஜன் என்பவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் கமிஷன் தொகையாக ரூ.30,000/–ஐ திரு. சின்னப்பையன் என்பவரிடம் இருந்து பெற்றுள்ளார்.

தவிர, தருமபுரி மண்டல பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளர்கள், வரி தண்டலர்கள் மற்றும் பேரூராட்சி பணியாளர்களிடம் 21.07.2021 முதல் 26.02.2024 வரை பணியிடமாற்றம் தொடர்பான ஆணை பெற (ரூ.2,00,000/–ல் இருந்து ரூ.3,00,000/– வரை) கையூட்டானது திரு. சிதம்பரம் (ஈப்பு ஓட்டுநர்) வழியாக பெறப்பட்டு முன்னாள் உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. குருராஜன் என்பருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் Cell No.9489746262 Google pay–யினை ஆய்வு மற்றும் அவரது வங்கி கணக்கு பரிவர்த்தனை ஆய்வு செய்யும் நிலையில் உண்மை நிலை தெரியவரும்.

ஆதலால் மேற்படி கையூட்டு பெறும் நபர்களான திரு. சிதம்பரம் (ஈப்பு ஓட்டுநர்) மற்றும் இளநிலை உதவியாளரான திரு. முரளி ஆகியோர்களின் மீது நடவடிக்கை எடுத்து பணியிடமாற்றம் செய்வதோடு, என்னுடைய மருத்துவ விடுப்புக்கால ஊதியத்தை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ள பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், முன்னர் எனது பணியிடமாற்றம் தொடர்பாக மேற்படி நபர்களால் நான் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதால் எனது உயிருக்கு ஆபத்து ஏதும் நேருமானால் ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம், முன்னாள் உதவி இயக்குநர் திரு. குருராஜன் மற்றும் இளநிலை உதவியாளர் திரு. முரளி ஆகியோர் பொறுப்பாவார்கள்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 05.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குரிடம் கோரப்பட்டது.

3) தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 22.08.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"முறையீட்டு மனுதாரர் திரு. S. பழனி என்பவர் சமர்ப்பித்த புகார் மனு குறித்து சம்பந்தப்பட்ட பணியாளர்களான ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம், இளநிலை உதவியாளர்களான திரு. மு. முரளி, மற்றும் திரு. மு. சின்னபையன் ஆகியோரை விசாரணை மேற்கொள்ள வேண்டி 22.08.2024ஆம் தேதியன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக கடிதம் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

22.08.2024 அன்று தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் புகார் மனுவில் தெரிவித்துள்ள புகார்களுக்கு, தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அலுவலக ஈப்பு ஓட்டுநர் திரு. கு. சிதம்பரம், பொ.மல்லாபுரம் பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு. மு. முரளி மற்றும் அரூர் பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு. மு. சின்னபையன் ஆகியோரிடம் மேற்கொண்ட விசாரணையில், திரு பழனி என்பவர், தங்கள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளார் என தெரிவித்தனர்.

மனுதாரர் திரு. எஸ். பழனி என்பவர் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தின் இளநிலை உதவியாளர் பணியிடத்திலிருந்து நிர்வாக காரணங்களின் அடிப்படையில் அரூர் பேரூராட்சி வரித்தண்டலராக மாறுதல் மற்றும் நியமனம் செய்து தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவரது 10.02.2023 நாளிட்ட செயல்முறைகளின்படி ஆணை பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து, திரு. எஸ். பழனி 10.02.2023 ஆம் தேதி பிற்பகல் முதல் விடுவிக்கப்பட்டார்.

மனுதாரர் திரு. எஸ். பழனி என்பவரின் மருத்துவ விடுப்பு காலமாகிய 11.02.2023 முதல் 18.04.2023 வரைக்கான மருத்துவ விடுப்புக்கால ஊதியத்தை வழங்குமாறு கோரியுள்ளதன் பேரில் அரூர் பேரூராட்சியில் பணியிட மாறுதல் செய்யப்பட்ட பணியிடத்தில் பணியில் சேராமல், மருத்துவ விடுப்பு மற்றும் ஈட்டிய விடுப்பு காலத்தினை மருத்துவக் குழுவின் அறிக்கையின்படி வரன்முறைப்படுத்தி அதற்கான ஊதியம் மற்றும் படிகள் அரூர் பேரூராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதித்து 22.08.2024 நாளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து திரு. எஸ். பழனி என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய விடுப்பிற்கான ஊதியம் மற்றும் படிகளை அவரது வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எனவே, புகார் மனுதாரர் கோரிக்கையின்படி மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய விடுப்பிற்கான ஊதியம் மற்றும் படிகள் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரும் 20.09.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.09.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. S. பழனி, என்பவர் தனது புகார் மனுவில் தெரிவித்திருந்த முகவரியில் இருந்து மாற்றலாகி விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியில் பணி மேற்கொண்டு வருவதால், தனக்கு அழைப்பாணை கிடைக்கப்பெறவில்லை எனவும், எனவே தனக்கு விசாரணை மேற்கொள்ள மற்றொரு சந்தர்ப்பம் அளிக்குமாறு தனது 20.09.2024 நாளிட்ட மனுவில் கோரியுள்ளார். எனவே மனுதாரர் திரு. S. பழனி 20.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6) எதிர்மனுதாரான தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. செ.கணேஷ் என்பவர் 20.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் : -

மனுதாரர் திரு. S. பழனி என்பவர் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலக இளநிலை உதவியாளராக பணிபுரிந்த போது நிர்வாக காரணங்களின் அடிப்படையில், தருமபுரி ஆட்சித்தலைவரின் 10.02.2024 நாளிட்ட செயல்முறை ஆணைகளின்படி அரூர் பேரூராட்சிக்கு வரி தண்டலராக பணியிட மாற்றம் செய்யப்பட்டார். ஆனால் பணியில் சேராமல் மருத்துவ விடுப்பில் சென்று விட்டார்.

மருத்துவக் குழுவின் பரிந்துரைப்படி மனுதாரர் துய்த்த விடுப்புக் காலமான 11.02.2023 முதல் 20.04.2023 வரையிலுள்ள விடுப்பு காலத்தினை வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டு , பணப்பயன்கள் வழங்கப்பட்டன. தனியருக்கு வழங்க வேண்டிய விடுப்புக்கால ஊதியம் ஏதும் நிலுவையில் இல்லை.

மனுதாரர் விடுப்பு ஊதியம் பெறுவதற்கும் மற்றும் பணியிட மாற்றத்திற்கும், உதவி இயக்குநர் அலுவலக ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம், மற்றும் இளநிலை உதவியாளர் திரு. முரளி மற்றும் அரூர் பேரூராட்சி வரி தண்டலர் திரு. சின்னபையன் ஆகியோர் மூலம் கையூட்டு பெறுவதாக மனுதாரர் தெரிவித்த புகார் மீது நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், மனுதாரர் உண்மைக்கு புறம்பாக குற்றச்சாட்டு அளித்துள்ளார் என தெரிவித்துள்ளனர்.

விடுப்பு ஊதியம் பெறுவதற்கு உதவி இயக்குநர் அலுவலக ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் என்பவருக்கு ரூ.10,000/– மற்றும் இளநிலை உதவியாளர் திரு. முரளி என்பவருக்கு ரூ.5,000/– G – Pay ல் அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ள புகார் குறித்து விசாரணை செய்ததில் ஆதாரம் ஏதும் இல்லை என தெரிய வருகிறது. திரு. சிதம்பரம் மற்றும் திரு. முரளி ஆகியோரின் வங்கி பணபரிவர்த்தனை அட்டவணையை (01.01.2023 முதல் 30.06.2024 வரையிலான காலத்திற்கு) பெற்று ஒருவார காலத்திற்குள் சமர்ப்பிக்கிறேன் என இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனுதாரர் துய்த்த மருத்துவ விடுப்புக்கான பணப்பயன்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கையூட்டு பெறுவதாக மனுதாரரின் குற்றச்சாட்டிற்கு எவ்வித ஆதாரமின்றி உண்மைக்கு புறம்பாக புகார் தெரிவித்துள்ளார்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரர் திரு. S. பழனி, என்பவர் தனது புகார் மனுவில் தெரிவித்திருந்த முகவரியில் இருந்து மாற்றலாகி விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியில் பணி மேற்கொண்டு வருவதால், 20.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை என்பதால் தனக்கு மற்றொரு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரியதைத் தொடர்ந்து 15.10.2024 அன்று ஆஜராக வாய்ப்பளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மனுதாரர் 15.10.2024 அன்று ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு தொவித்துள்ளார்.

"தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில், 12.08.2022 முதல் 09.02.2023 வரை இளநிலை உதவியாளராக பணிபுரிந்தேன். அரூர் பேரூராட்சியில் வரி தண்டலராகப் பணிபுரிந்த திரு. சின்னப்பையன் என்பவருக்கு இளநிலை உதவியாளராக பதவி உயர்வு அளிக்கும் பொருட்டு ரூ.3 இலட்சம் கையூட்டு பெற்று அவருடைய பணியிடமான அரூர் பேரூராட்சி வரி தண்டலராக 10.02.2023 அன்று என்னை பணியிடம் மாற்றம் செய்தனர்.

பணியிட மாற்றம் ஆணையினை நான் ஏற்கவில்லை என்பதால், முன்னாள் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. குருராஜன், ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் மற்றும் இளநிலை உதவியாளர் திரு. முரளி ஆகியோரின் தூண்டுதலின் பேரில் தாக்குதலுக்கு உள்ளாகி அரசு மருத்துமனையில் சேர்க்கப்பட்டேன்.

இதன் காரணமாக 11.02.2023 முதல் 18.04.2023 வரை உரிய மருத்துவச் சான்றுடன் மருத்துவ விடுப்பில் சென்றேன். மேற்காணும் மருத்துவ விடுப்பு கால ஊதியம் இந்நாள் வரை வழங்கப்படவில்லை. மேலும், Compulsory wait காலத்திற்கான ஊதியமும் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை.

முன்னாள் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. குருராஜன், பணிக்காலமான 21.07.2021 முதல் 26.02.2024 வரையிலான காலத்தில், முன்னாள் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. குருராஜன், ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் மற்றும் இளநிலை உதவியாளர் திரு. முரளி ஆகியோர் தருமபுரி மண்டல பேரூராட்சிகளில் அனைத்து பணியிட மாற்றத்திற்கும் Gpay & Phonepay மூலமாக கையூட்டு பெற்றுள்ளனர். இதற்கு ஆதாரமாக அவர்களது Gpay மற்றும் Phonepay கணக்குகளை ஆய்வு செய்தாலே தெரிந்துவிடும். இவ்வாறு தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், வரி தண்டலர்கள், இளநிலை உதவியாளர்கள் ஆகிய பணியாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, எனக்கு சேர வேண்டிய மருத்துவ விடுப்பு கால ஊதியம் மற்றும் Compulsory wait காலத்திற்கான ஊதியம் ஆகியவற்றை பெற்றுத்தர ஆவன செய்யுமாறும் மற்றும் முறைகேடாக கையூட்டு பெற்ற முன்னாள் உதவி இயக்குநர் திரு. குருராஜன், ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் மற்றும் இளநிலை உதவியாளர் திரு. முரளி ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தருமபுரியை சார்ந்த மனுதாரர் திரு. S. பழனி என்பவர் 30.04.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில், தான் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த போது தான் துய்த்த 11.02.2023 முதல் 18.04.2023 வரையிலான காலத்திற்கான மருத்துவ விடுப்புக்கான ஊதியத்தை வழங்க இளநிலை உதவியாளர் திரு. முரளி மற்றும் ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் ஆகியோர் கையூட்டு கேட்டு நிர்ப்பந்தம் செய்வதாகவும், மற்றும் இந்நாள் வரை மேற்காணும் மருத்துவ விடுப்பு கால ஊதியம் வழங்கப்படவில்லை எனவும், மேலும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 21.07.2021 முதல் 26.02.2024 வரையிலான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணியிட மாற்றங்களுக்கு முன்னாள் உதவி இயக்குநர் திரு. குருராஜன், இளநிலை உதவியாளர் திரு. முரளி மற்றும் ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் ஆகியோர் கையூட்டு பெற்றதாக புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் திரு. S. பழனி என்பவர் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த போது, தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின் ஆணை ந.க.எண்.74/2023/பே3 நாள் 10.02.2023 ன்படி, அரூர் பேரூராட்சியில் வரிதண்டலராக பணியிட மாற்றம் செய்யப்பட்டார். ஆனால், மனுதாரர் அப்பணியிடத்தில் பணி சேராமல் மருத்துவ விடுப்பில் சென்றதால், அவர் 11.02.2023 முதல் 20.04.2023 வரை துய்த்த ஈட்டிய விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பு காலத்தினை மருத்துவக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ந.க.எண்.527/2023/பேரூ, 22.08.2024 நாளிட்ட செயல்முறைகளின் ஆணைப்படி வரன்முறைப்படுத்தப்பட்டதை ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. மேலும் மனுதாரருக்கு சேரவேண்டிய மருத்துவக்கால பணப்பயன்கள் முழுமையாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது என உதவி இயக்குநரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் பணியிட மாற்றத்திற்கு கையூட்டு பெறப்படுவது குறித்து, இளநிலை உதவியாளர்கள் திரு. முரளி மற்றும் திரு. சின்னபையன் மற்றும் ஈப்பு ஓட்டுநர் திரு. சிதம்பரம் ஆகியோரை உதவி இயக்குநரால் 22.08.2024 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், மனுதாரர் உண்மைக்கு புறம்பாக குற்றச்சாட்டு சுமத்தியுள்ளார் என மேற்காணும் மூவரும் தெரிவித்துள்ளதாக உதவி இயக்குநரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேலும், இதற்கு ஆதாரமாக திரு. முரளி மற்றும் திரு. சிதம்பரம் ஆகியோரின் 01.01.2023 முதல் 30.06.2024 வரையிலான காலத்திற்கான வங்கி பணபரிவர்த்தனை அட்டவணையை சமர்ப்பிப்பதாக வாக்குமூலத்தில் தெரிவித்த உதவி இயக்குநர், தனது 30.09.2024 நாளிட்ட கடிதத்தில் மேற்காணும் இருவரின் கடைசி 6 மாத காலமான 15.03.2024 முதல் 19.09.2024 வரையிலான காலத்திற்கான வங்கி பணப் பரிவர்த்தனை பட்டியலை சமர்ப்பித்துள்ளார்.

ஆனால், மனுதாரர் 21.07.2021 முதல் 26.02.2024 வரையிலான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணியிடமாற்றங்களுக்கு முன்னாள் உதவி இயக்குநர் திரு. குருராஜன் மற்றும் திரு. முரளி, இளநிலை உதவியாளர் மற்றும் திரு. சிதம்பரம் ஈப்பு ஓட்டுநர் ஆகியோர் மீது புகார் தெரிவிக்கும் நிலையில், மேற்காணும் காலத்திற்கான வங்கி பணப்பரிவர்த்தனை பேரூராட்சி செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் தருமபுரி மண்டல பேரூராட்சிகளில் பணியிட மாற்றங்களுக்கு [21.07.2021 முதல் 26.02.2024 வரையில்] கையூட்டு பெறப்பட்டதாக தெரிவிக்கும் புகாரின் உண்மை நிலையை கண்டறிய, பேரூராட்சிகளின் இணை இயக்குநர் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து, தருமபுரி மண்டல பேரூராட்சிகளில் பணியிட மாற்றங்கள் குறித்து விசாரணை செய்து, அதன் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து , அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, நவம்பர் 15 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. பழனி,
   3/26, அரசு கலைக்கல்லூரி (எதிர்)
   நேரு நகர், சேலம் மெயின் ரோடு, தருமபுரி, தருமபுரி மாவட்டம்.
   செல் – 8072358812

2. உதவி இயக்குநர்,
   தருமபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
   தருமபுரி.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
   (பெயரிடப்பட்ட உரையில்)
   பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)

சென்னை–600 032